பக்கங்கள் 18+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 28 ஞாயிற்றுக்கிழமை 12.01.2025 | அதிர்வு 164

## வெடி கொளுத்திய இருவர் பருத்தித்துறையில் கைது!

யாழ்ப்பாணம், பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பட்டாசு கொளுத்திய இருவர் கைது செய்யப்பட்டனர்.

04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் தாமாகவே பதவி விலக இணங்கினார்


## குற்ற விசாரணைப் பிரேரணை நகர்த்தலை அடுத்து

நீதித்துறையில் சர்ச்சைக் குரியவராக விளங்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத் தின் தலைவர் நீதியரசர் நிஸ் ஸங்க பந்துல கருணாரத்ன தனது பதவியில் இருந்து தாமாகவே விலகிச் செல்ல இணங்கியுள்ளார் என அறிய வருவதாக ‘சண்டே டைம்ஸ்’ பத்திரிகை தெரிவித்துள் ளது.

தேசிய மக்கள் சக்தி அரசு அவருக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை (Impeachment) கொண்டுவரத் திட்டமிட்டுள்ளதை அடுத்து இந்த முடிவுக்கு அவர் இணங்கி யுள்ளார் எனக் கூறப்படுகின் றது.

நீதியரசர்கருணாரத்னதனது இராஜிநாமாக் கடிதத்தை இம் மாத இறுதியில் சமர்ப்பிக்க வுள்ளார் எனவும் தெரிவிக் கப்படுகின்றது.

04



# உயர் நீதிமன்ற நீதியரசர்களாக நால்வர் இன்று ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம்



நான்கு புதிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் இன்று காலை ஜனாதி பதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னி லையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

04





# தேர்தல் கடமையில் ஈடுபட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படவில்லை

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் தேர்தல் கடமையில் ஈடுபட்ட அரச உத்தியோகத்தர்களுக்குக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்று உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தல் கடந்த வருடம் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெற்றது. இதன்போது தேர்தல் கடமைகளில் பல அரச உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

குறித்த உத்தியோகத்தர்களுக்கான தேர்தல் கடமைக்கான கொடுப்பனவுகள் பல மாவட்டங்களிலும் வழங்கப்பட்டுள்ள போதும் வன்னித் தேர்தல் தொகுதியில் வழங்கப்படவில்லை எனக் கடமையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, வன்னித் தேர்தல் தொகுதியில் தேர்தல் நடைவடிக்கைக்கு அரசால் ஒதுக்கப்பட்ட நிதியில் முறைகேடு இடம்பெற்றுள்ளது எனவும், இதன் காரணமாக வவுனியா மாவட்ட தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தற்காலிகமாகப் பணி இடைநிறுத்தப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும், இதன்காரணமாக தேர்தல் கடமையில் ஈடுபட்டவர்களுக்குக் கொடுப்பனவு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது எனவும் மாவட்ட செயலகத்தில் இருந்து அறியமுடிகின்றது.



# கப் வாகனம் மோதுண்டு பொலிஸ் அதிகாரி சாவு

அம்பாந்தோட்டை, ரன்னவிலில் உள்ள படாத்த பண்ணைக்கு அருகில் நேற்று இரவு 7 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்தார் என்று ஹங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பலாந்தோட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 54 வயதான அன்ட்ர ஹெளன்னடிகே மஞ்சுள பிரியநாத் என்ற பொலிஸ் அதிகாரியே உயிரிழந்தார். இவர் அம்பாந்தோட்டை, நோனகம பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

மேற்படி பொலிஸ் அதிகாரி தனது மோட்டார் சைக்கிளில் ரன்னவிலில் இருந்து ஹங்கம நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, ஹங்கமவில் இருந்து ரன்னவில நோக்கி வந்த ஒரு கப் ரக வாகனம் மோதியது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கப் வாகனத்தின் சாரதி வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் மோட்டார் சைக்கிள் மீது மோதினார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் உடல் ரன்னவில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கப் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.


விபத்து தொடர்பில் ஹங்கம போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் திடீரென மயங்கி வீழ்ந்த ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் யோகாசனப் பயிற்சி செய்துகொண்டிருந்த ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

கொக்குவிலைச் சேர்ந்த ரவீந்திரன் சுதாகர் (வயது 42) என்பவரே உயிரிழந்துள்ளார்.

யோகாசனப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளை திடீரென மயங்கி வீழ்ந்தவரை மீட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.





# வவுனியாவில் விவேகானந்தரின் பிறந்த தினம் அனுஷ்டிப்பு!

(கி.வசந்தன்)

சுவாமி விவேகானந்தரின் 162 ஆவது பிறந்த தின நிகழ்வு வவுனியா ரயில் நிலைய வீதிலுள்ள நினைவுத் தூபியில் இன்று காலை இடம்பெற்றது.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் மற்றும் வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவரது சிலைக்கு, மலர் மாலை அணிவித்து, மலர்தூவி நினைவுகூரப்பட்டது. அவர் தொடர்பான நினைவுரைகளை தமிழ்மணி அகளங்கன் மற்றும் மாணவர்கள் வழங்கியிருந்தனர்.

நிகழ்வில் சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத் தலைவர் ப.சத்தியநாதன் மற்றும் உறுப்பினர்கள், நகர சபை செயலாளர் அ.பாலகிருபன், ஓட்டோ உரிமையாளர் சங்கத் தலைவர் ரவீந்திரன், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.







# வடமராட்சியில் 'பகிர்ந்து உண்போம்' செயற்றிட்டம்

வடக்கு – கிழக்கு மறுவாழ்வு நிறுவனத்தின் 2025 ஆம் ஆண்டுக்குரிய பகிர்ந்து உண்போம் செயற்றிட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

""பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட எமது உறவுகளின் வீடுகளிலும் பொங்கல் பொங்கி கொண்டாடி மகிழ்வோம்" என்ற எண்ணக்கருவில் உருவாகிய இந்தப் பகிர்ந்து உண்போம் செயற்றிட்டத்தின் கீழ் நெல்லியடி, உடுப்பிட்டி பகுதிகளைச் சேர்ந்த 48 குடும்பங்களுக்கான பொங்கல் பானை மற்றும் பொங்கல் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு – கிழக்கு மறுவாழ்வு நிறுவனத்தின் தலைவரும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான ச.சுகிர்தன், சமூக சேவையாளர்களான பாஸ்கரன், இந்திராணி மற்றும் நிறுவனத்தின் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டிருந்தார்கள்.

கடந்த சில வருடங்களாகப் பகிர்ந்துஉண்போம்செயற்றிட்டம்வடக்கு, கிழக்கு எங்கும் வடக்கு – கிழக்கு மறுவாழ்வு நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### மேன்முறையீட்டு...

மிகவும் சர்ச்சைக்குரியவராக விளங்கிய நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்னவை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உயர் நீதிமன்ற நீதியரசர் பதவிக்கு பிரேரித்தாராயினும் அப்போதைய அரசமைப்புக் கவுன்ஸில் அதனை நிராகரித்திருந்தது. அந்தப் பின்புலத்தில் புதிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் நியமனங்களும் தொடர்ந்து இடம்பெறாமல் தடைப்பட்டிருந்தன.

இந்த விவகாரத்தில் நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்னவுக்கு உயர் நீதிமன்ற நீதியரசர் நியமனம் வழங்கப்படாமையை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவை நிராகரித்த உயர் நீதிமன்றம், மேற்படி நீதியரசர் தொடர்பாக சில விடயங்களைத் தனது தீர்ப்பில் குறிப்பிட்டு இருப்பதாக கூறப்படுகின்றது. அந்த விடயங்களை முன்னிறுத்தியே அவருக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசுத் தரப்பு தயாரானதாகவும் கூறப்படுகின்றது.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைக் கொண்டுள்ள தற்போதைய அரசு இத்தகைய அந்தப் பெரும்பான்மை மூலம் இது போன்ற குற்ற விசாரணைப் பிரேரணைகளை இலகுவாக முன்நகர்த்த முடியும் என்ற பின்புலத்தில், தாமாகவே பதவியை விட்டு விலகுவதற்கு நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரத்ன இணங்கினார் என்று இப்போது கூறப்படுகின்றது.

உயர் நீதிமன்றத்தில் இப்போது பணியில் இருக்கும் வேறு சில உயர் நீதிமன்ற நீதியரசர்கள் தொடர்பாகவும் இத்தகைய குற்றச்சாட்டுகள் அரசல் புரசலாக நிலவுவது குறிப்பிடத்தக்கது.

### உயர் நீதிமன்ற...

அதன்படி, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான ஆர்.எம்.எஸ். ராஜகருணா, மேனகா விஜேசுந்தர, சம்பத் பி.அபேகோன் மற்றும் எம்.எஸ். கே.பி. விஜேரத்ன ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் புதிய உயர் நீதிமன்ற நீதியரசர்களாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்துகொண்டார்.

### வெடி கொளுத்திய...

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை பகுதியில் உயிரிழந்தவரின் இறுதி ஊர்வலத்தின்போது, நீதிமன்றுக்கு அருகில் அதிக சத்தமான பெருமளவான வெடிகளைக் கொளுத்தியமையால், சத்தம் காரணமாக நீதிமன்ற நடவடிக்கைகள் சுமார் 30 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டிருந்தன.

இதையடுத்து உடனடியாக விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை பொலிஸார் வெடிகளைக் கொளுத்தினார்கள் எனும் குற்றச்சாட்டில் இருவரைக் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வாக்குமூலங்களைப் பதிவு செய்தனர்.

அவர்களுக்கு எதிராக 15ஆம் திகதி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும், அன்றைய தினம் மன்றில் முன்னிலையாக வேண்டும் எனவும் அறிவுறுத்தி இருவரையும் பொலிஸ் பிணையில் பொலிஸார் விடுவித்தனர்.

# தொல்பொருள் என்ற போர்வையில் மக்கள் காணிகளைச் சூறையாடாதீர்!

## நாடாளுமன்றில் சண்முகம் குகதாசன் எம்.பி.

(ஹஸ்பர் ஏ.எச்.)

தமிழ் மக்கள் சில நூற்றாண்டு காலமாக விவசாயம் செய்து வருகின்ற, விவசாய நிலங்களை, தொல்பொருள் துறையானது தமது தொல்பொருள் இடங்களாக அறிவித்து கையகப்படுத்தி வருகின்றது.

இவ்வாறு இலங்கைத் தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் ,

இந்த ஆண்டு தொடங்கி பத்து நாள்கள் கூட முடிவடையாத நிலையில், தொல்லியல் துறையானது கடந்த ஆறாம் திகதி மாலை திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் வட்டவான் கிராமசேவர் பிரிவில் அடங்கும் 224 விவசாயிகளுக்கு சொந்தமான 380 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்பயிரோடு கூடிய விவசாய நிலத்தை தமது தொல்லியல் பகுதி என அறிவித்துள்ளது.


அதேபோன்று குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் குச்சவெளி கிராம சேவையாளர் பிரிவில், 1985 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே விவசாயிகள் பயன்படுத்தி வந்த நெற்களஞ்சியம் மற்றும் சந்தைப் பகுதியை தொல்லியல்துறை தொல்பொருள் பகுதி என அறிவித்துள்ளது.

இதற்கு முன்னரும் தொல்லியல் துறையானது, குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள திரியாய் கிராம சேவையாளர் பிரிவில் உள்ளடங்கும் பிரித்தானியர்களால் வழங்கப்பட்ட உறுதிகளைக் கொண்ட, 150 ஆண்டு காலமாக தமிழ் மக்கள் விவசாயம் செய்து வருகின்ற, அண்ணளவாக ஆயிரம் ஏக்கர் நிலத்தை விவசாயம் செய்ய விடாமல் எல்லைக் கற்களை போட்டு பிடித்து வைத்துள்ளது.

இதனை விடவும், மேலும் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் தென்னைமரபுஅடி, புல்மோட்டை, திரியாய், குச்சவெளி, ஜாயா நகர், கும்புறுப்பிட்டி, நிலாவெளி, பெரியகுளம் முதலிய கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய 1994 ஏக்கர் நிலத்தை எல்லைக் கற்களை இட்டுப் பிடித்து வைத்துள்ளது.

இந்தச் செயலானது, நெல் உற்பத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது நாட்டுக்குப் பேரிழப்பாகும்.

இது மட்டுமல்லாமல் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும், இராஜவந்தான் மலை முருகன் கோயில், கூனித்தீவு மத்தளைமலை முருகன் கோயில், கிளிவெட்டி முத்துமாரியம்மன் கோயில் அதேபோன்று, சேருவில பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும், திருமங்கலாய் சிவன் கோயில், ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும், இலங்கைத்துறை முகத்துவாரம் பெரியசாமி கோயில் மற்றும் கல்லடிமலை நீலியம்மன் கோயில் அதேபோன்று, திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலக பிரிவில் உள்ளடங்கும், கன்னியா வெந்நீர் ஊற்று மற்றும் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும், தென்னமரபுஅடி கந்தசாமிமலை முருகன் கோயில், குச்சவெளி செம்பிமலை சிவன் கோயில் மற்றும் வழத்தான்மலை நாகதம்பிரான் கோயில் முதலிய சைவ கோயில்களையும் அவற்றைச் சூழவுள்ள விவசாய நிலங்களையும் கையகப்படுத்துகின்ற முன்முயற்சிகளில் தொல்பொருள் துறை ஈடுபட்டு வருவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.



இதற்கு மேலாக, இலங்கையில் புகழ்பெற்ற கோணேஸ்வரர் கோயில் வளாகத்தில் உள்ள 453 ஏக்கர் நிலத்தையும் தொல்பொருள் துறை கையகப்படுத்தி வைத்துள்ளது. இந்தப் பகுதியில் ஒரு வாழை மரத்தை நடக்கூட தொல்லியல்துறை தடை விதிக்கின்ற அதே வேளை, இங்கு 58 சட்டவிரோத கடைகள் கட்டியிருப்பது பற்றி எந்த கவலையும் கொள்ளவில்லை. பல வேளைகளில் அவர்களுக்கு சாதகமாக நடந்து கொள்வதையும் அவதானிக்க கூடியதாக உள்ளது. இது ஒரு இனவாத போக்கை எடுத்துக் காட்டுவதாக அமைகிறது.

தொல்பொருள்துறை மட்டுமில்லாமல், அரசின் மற்றுமொரு அங்கமான வனத்துறை, திருகோணமலை மாவட்டத்தில், 1983 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில், போரின்போது மக்கள் உயிர் பாதுகாப்புக் கருதி இடம்பெயர்ந்த வேளையில், மக்கள் விவசாயம் செய்த 41,361 ஏக்கர் நிலத்தைத் தமது மனம் போன போக்கில் எல்லைக் கற்களை போட்டுபிடித்துவைத்துக்கொண்டுள்ளது. காணியினுள் செல்லவோ அல்லது விவசாயம் செய்யவோ விடாமல் தடுத்து வருகின்றது.

இது மட்டுமல்லாமல் வனத்துறை எல்லைக் கற்களை இடாத பகுதிகளில் கூட மக்கள் தமது காணிகளில் விவசாயத்தில் ஈடுபட வனத்துறையிடம் ஒப்புதலைப் பெறமுடியாத நிலை காணப்படுகிறது.

இதேபோன்று வனவிலங்கு துறையானது, கால்நடை வளர்ப்பாளர்கள் பல தலைமுறைகளாக மேய்ச்சல் தரையாக பயன்படுத்தி வந்த நிலங்களை, அவர்கள் போரின்போது இடம்பெயர்ந்த வேளையில், எல்லைக் கற்களை போட்டு பிடித்து வைத்துக் கொண்டு, இந்த நிலங்களில் காட்டு விலங்குகள் மட்டுமே மேயலாம். வீட்டு விலங்குகள் மேய முடியாது என்று தடுத்து வருகிறது.

இதனால் ஆயிரக்கணக்கான கால்நடை வளர்ப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கான கால்நடைகள் போதிய உணவின்றி இன்னலுருகின்றன. ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 600 கால்நடை வளர்ப்பாளர்கள் தமது 28,000 கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரையின்றி இன்னல் படுகின்றனர். இவர்கள் கால்நடை வளர்ப்பையே தமது வாழ்வாதாரமாக கொண்டவர்கள்.

இத்தகைய சிக்கல் தம்பலகமம், குச்சவெளி, கிண்ணியா, மூதூர் மொறவெவ முதலிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று, துறைமுக அதிகார சபையானது, திருகோணமலையின் பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் 11 கிராம சேவை பிரிவுகளை உள்ளடக்கிய 5,572 ஏக்கர் நிலத்தைக் கையப்படுத்தி வைத்திருக்கின்றது. இந்தப் பகுதிக்குள் வாழும் 763 குடும்பங்கள் தமது குடியிருப்பு காணிகளில் எதுவித செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியாது இருக்கின்றனர். விவசாய நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத சூழலும் காணப்படுகின்றது.

இலங்கை அரசு உணவு உற்பத்தியை பெருக்குமாறு கூறுகின்ற அதே வேளை அரசின் அங்கங்களான தொல்பொருள்துறை, வனவிலங்குத் துறை, துறைமுக அதிகாரசபை முதலியன விவசாய நடவடிக்கைகளை தடுப்பதன் மூலம் உணவு உற்பத்தினை குறைத்தும் வருகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் அரச திணைக்களங்கள் மட்டுமன்றி, முற்றும் துறந்த பிக்குகளும் மண்ணாசை கொண்டு குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் 2,172 ஏக்கர் நிலத்தைப் பிடித்து வைத்துக் கொண்டு, மக்களை விவசா யம் செய்ய விடாமல் தடுத்து வருகின்றனர்.

இந்த விடயத்தில் அரசு உரிய கவனம் செலுத்தித் தொல்பொருள் துறை, வனவிலங்குத்துறை, துறைமுக அதிகார சபை, புத்தபிக்குகள் ஆகியோர் பிடித்து வைத்துள்ள மக்களுடைய காணி களை விடுவித்து, மக்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடவும், அதன் வழி நெல் உள்ளிட்ட உணவு உற்பத்தியைப் பெருக்கவும் ஆவன செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.– என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தடுமாறும் அரசு

நாட்டின் நிதி நிலைவரம் குறித்து உண்மையான தகவல்களுடன் கூடிய தெளிவுபடுத்தலை அரசாங்கம் முன்வைக்க வேண்டும், சரியான நிலைவரத்தை அது பகிரங்கப்படுத்த வேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க கோரியிருக்கின்றார்.

இந்த ஆண்டில் 4,500 பில்லியன் ரூபா (அதாவது நான்கரை லட்சம் கோடி ரூபா) வரையில் அரச வருவாயைத் திரட்டிக் கொள்ள வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துக்கு அறிவுறுத்தியுள்ளது என்று சுட்டியுள்ள அவர், மக்கள் மீது பாரத்தைச் சுமத்தி வரி அதிகரிப்பை மேற்கொள்வதைத் தவிர, அரசவருவாய் அதிகரிப்புக்கு அரசாங்கத்திடம் எவ்வித திட்டங்களும் கிடையவே கிடையாது என்றும் அவர் அடித்துக் கூறுகின்றார்.

சர்வதேச நாணய நிதியமே இன்று நாட்டை நிர்வகிக்கிறது. அது கூறிய படியே இயங்குவதைத் தவிர, அரசுக்கு வேறு வழியோ, நாதியோ கிடையாது என்பதையும் அவர் சுட்டுகின்றார்.

4,500 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வருமானத்தை இந்த ஆண்டு திரட்டிக் கொள்ளுமாறு சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்தை அறிவுறுத்தியுள்ளது. அதன்படி நடக்க வேண்டியது அரசாங்கத்தின் தப்பவே முடியாத கடப்பாடு.

இந்த நாட்டில் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட மோசமான பொருளாதார நெருக்கடி சர்வதேச நாணய நிதியத்தின் கால்களில் விழுவதை தவிர வேறு வழிகளைத் தந்து நிற்கவில்லை.

மீள முடியாத பொருளாதார நெருக்கடியில் சிக்கித் துவண்டு கிடந்த இலங்கை தேசத்தை ஆபத்பாந்தவனாக வந்து பிணையெடுக்க முன்வந்த சர்வதேச நாணய நிதியம், எதிர்கால பொருளாதார நடவடிக்கைகளைத் தனது வழிப்படுத்தலுக்கு அமைய முன்னெடுக்க வேண்டும் என்ற நிபந்தனையை விதித்தது. அதற்கு இணங்கிப் போவதை தவிர, இலங்கைக்கு வேறு வழியே இருக்கவில்லை.

இலங்கையை நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார நடவடிக்கைத் திட்டத்தின் படி இந்த ஆண்டில் வரிகளூடாக அரசாங்கம் 4,500 மில்லியன் ரூபாவை வருவாயாகத் திரட்டியாக வேண்டும் என எல்லை விதிக்கப்பட்டிருக்கின்றது

இந்த வருவாயை வரிகள் ஊடாக திரட்டிக் கொள்ள அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. அத்தியாவசிய பொருள்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகளை விதித்தே 4,500 பில்லியன் ரூபா வருவாயை அரசு திரட்டிக் கொள்ள முடியும், திரட்டிக் கொள்ள எத்தனிக்கும் என்று சம்பிக்க ரணவக்க கூறியிருக்கின்றார்.

இதுவே உண்மை. நாட்டின் இந்த நிதி நிலைமை குறித்து மக்களுக்கு உண்மையைக் குறிப்பிடாமல் அரசு தொடர்ந்து மறைக்குமாக இருந்தால் கோட்டாபய ராஜபக்‌ஷவின் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட கதியே இந்த அரசாங்கத்துக்கும் ஏற்படும் என்று அவர் எச்சரித்திருப்பதில் அர்த்தங்கள் ஆயிரம் இல்லாமலில்லை.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கத்திடம் வேறு நடைமுறைச் சாத்தியமான கொள்கைத் திட்டங்கள் ஏதும் இருப்பதாகவும் தெரியவில்லை.

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டும். நட்டமடையும் அரச நிறுவனங்களை நிர்வகிக்கும் பொறுப்பில் இருந்து அரசாங்கம் விடுபட வேண்டும். நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது தனியார் மயப்படுத்தலாக அமையாது. அரச நிறுவனத்தின் உரிமத்தை அரசு தனதாக்கிக் கொண்டு ஏனைய பங்குகளை தனியார் தரப்பினருக்கு வழங்க வேண்டும் என்று ரணவக்க ஆலோசனை கூறுகின்றார்.

தாங்கள் ஆட்சிக்கு - அதிகாரத்திற்கு - வந்தால் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாட்டை மறுசீரமைப்போம், மாற்றி அமைப்போம் என்றெல்லாம் தேர்தலுக்கு முன்னர் கர்ஜித்த தேசிய மக்கள் சக்தி, இப்போது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் பொருளாதாரத்தை சீரமைப்பதில் பெரும் தடுமாற்றத்தை எதிர்கொள்கின்றது என்பது கண்கூடு. முன்னைய ரணில் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கைகள், ஏற்பாடுகளை அப்படியே பின்பற்றி ரணில் ராஜபக்‌ஷ அரசின் வழியில் நடப்பதை தவிர இந்த அரசாங்கத்திடம் மாற்று திட்டம் ஏதும் இல்லை என்பது அம்பலமாகி வருகிறது.





# ‘பிஞ்சு மனம்’ சிறுகதை நூல் வெளியீட்டு விழா





(எம். எப். றிபாஸ்)

வெலிகம ரிம்ஸா முஹம்மத் எழுதிய “பிஞ்சு மனம்” சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா வெள்ளவத்தை தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது.

பூங்காவனம் இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் தமிழ் மணி மானா மக்கீன் முன்னிலையில், கவிஞர் திக்குவல்லை ஸப்வான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன் பிரதம அதிதியாகவும், கவிஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கல்விமான்கள், தொழிலதிபர்கள், விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

நூலின் பிரதிகளை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆர். ஹபீஸ், அமேசன் உயர் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் இல்ஹாம் மரிக்கார், ஊடகவியலாளர் அஷ்ரப் ஏ சமது ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.





# வேலை வாய்ப்பு பிரதி அமைச்சர் சவுதி தூதுவருடன் சந்திப்பு

(எச். எம். ஹலால்தீன் )



வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா மற்றும் இலங்கைக்கான சவுதி அரேபி யவின் தூதுவர் காலித் ஹமூத் அல்–கதானி ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு இலங்கை வெளிநாட்டு அலு வல்கள் அமைச்சில் பிரதி அமைச்சரின் அலுவலகத்தில் அண்மையில் இடம் பெற்றது.

நட்புரீதியான இந்தச் சந்திப்பை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்ச கத்தின் பொருளாதார அபிவிருத்திக் குழு மற்றும் இராஜ தந்திர சட்டக்குழு இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

இதன் போது இலங்கையின் எரிபொருள் மற்றும் எரிவாயு சம் மந்தமான மறுசீரமைப்பு, கிண்ணியா குறிஞ்சாக் கேணி பாலம் மற்றும் தொழில் அபி விருத்தி அடங்கலாக இன்னும் பல முக்கிய விடயங்கள் கலந்துரையா டப்பட்டன. கலந்தாலோசிக்கப்பட்ட விடயங்களை கூடிய விரைவில் நடை முறைப்படுத்தத் தேவையான முன்னெ டுப்புகளை செய்ய வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.








# பெருந்தோட்டத் துறை மக்கள் குரல் அமைப்பின் பொதுச் சபை கூட்டம்

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பின் மாத்தறை, காலி மற்றும் களுத்துறை மாவட்டங்களுக்கான பிரதி நிதிகளின் பொதுச்சபை குழு கூட்டம் காலியில் பெருந்தோட்டத் துறை மக்கள் குரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அன்டனி ஜேசுதாஸன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பெருந்தோட்டத் துறை மக்கள் குரல் அமைப்பின் திட்ட பணிப்பாளர் லவினா ஹசந்தினி தேசிய திட்ட இணைப்பாளர் எப். ராஜன், கள முகாமையாளர் அன்டன் வனத்தையா மற்றும் மாவட்ட இணைப்பாளர்களான ஏ.ஜெஸ்மன் , கே.யோகசுஜி ஆகியோர் கலந்து கொண்டு கூட்டத்தை வழிநடத்தினர்.



நிகழ்வில் பல துறைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கலந்து கொண்டு மலையக சமூகங்கள் எதிர்நோக்கும் காணி, வீடு மற்றும் கல்வி உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினர்.

அமைப்பின் எதிர்காலத்துக்கான செயற்பாடுகளை இனங்கண்டு மலையக மக்களின் குரல்களுக்கு செவி சாய்ப்பது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. பொதுச் சபைக்கான புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது.

# யாழ். திருநெல்வேலிப் பகுதியில் கேரள கஞ்சாவுடன் இளைஞன் கைது!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, தபால் பெட்டி சந்தியருகில் கேரள கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் இன்று (12) காலை கைது செய்யப்பட்டார். விசுவமடுவைச் சேர்ந்த 37 வயதான இளைஞனே இவ்வாறு யாழ். மாவட்டக் குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடம் இருந்து ஒரு கிலோ 345 கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இதன்போது அந்த நபர் பயணித்த மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.





# சிறுவர் இல்லங்களுக்கு உதவிகள் வழங்கிவைப்பு

(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வீரமுனை சீர்பாத தேவி சிறுவர் இல்லம் மற்றும் அஸ்ஸலாம் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் குறைபாடுகளை அறிந்து அவற்றுக்கு உதவி உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியகா சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா கலந்து கொண்டார்.

சிறுவர் இல்லங்களுக்கு முதற்கட்டமாக மெத்தைகள் மற்றும் நுளம்பு வலைகள் வழங்கி வைக்கப்பட்டன. இல்லங்களின் குறைபாடுகளை பிரதேச செயலாளர் கேட்டறிந்து கொண்டதுடன் அதனை நிவர்த்தி செய்யுமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியிருந்தார்.



இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லம், சமூக சேவை உத்தியோகத்தர்கள் ஏ.எம்.ஏ சாபீர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வி.விஜயதாஸ், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களான ஏ.ஜே. குறைசா அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எம்.டீ. முஜாஹீடீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கற்பிட்டி தள ஆஸ்பத்திரிக்கு முதன் முறையாக விசேட பொது வைத்திய நிபுணர் நியமனம்

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

கற்பிட்டி தள வைத்தியசாலைக்கு முதன் முறையாக நிரந்தரமாக விசேட பொது வைத்திய நிபுணராக வைத்தியர் டிலத்தீர் இஷான் கமாராச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் உத்தியோக பூர்வமாகக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். கற்பிட்டி தள வைத்தியசாலையின் அபிவிருத்தி குழுவின் ஏற்பாட்டில் கற்பிட்டி தளவைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் தனஞ்சன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கற்பிட்டி தள வைத்தியசாலையின் வைத்தியர்கள், பிரதம தாதிமார், வைத்தியசாலையின் ஏனைய அதிகாரிகள், வைத்திய சாலை முகாமைத்துவ உத்தியோகத்தர் மற்றும் தள வைத்தியசாலையின் அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் நலன் விரும்பிகள் முன்னிலையில் கற்பிட்டியின் முதலாவது நிரந்த பொது வைத்திய நிபுணர் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். புதிய ஐந்து மாடி கட்டடத்தை யும் பார்வையிட்டார்.





# வீதிகளின் பெயர் விளம்பர பலகைகள் அகற்றப்பட்டமையால் பயணச் சிரமம்

(பாறுக் ஷிஹான்)

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் கடந்த காலங்களில் நிர்மாணிக்கப்பட்ட விளம்பர பெயர் பலகைகள் பல அகற்றப்பட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை சாய்ந்தமருது மாவடிப்பள்ளி காரைதீவு உள்ளிட்ட சில பகுதிகளின் விளம்பர பலகைகள் இவ்வாறு அகற்றப்பட்டுள்ளன.

மேற்படி விளம்பர பலகைகள் சேதமடைந்த நிலையில் காணப்பட்டதுடன் தெளிவற்றதாக இடங்களின் பெயர்களும் கடந்த காலங்களில் காணப்பட்டதை ஆர்வலர்கள் சிலரால் சமூக ஊடகங்களில் வெளிக்காட்டப்பட்டது.

இவ்வாறு பெயர் பலகைகள் திடீரென அகற்றப்பட்ட போதிலும் தற்காலிகமான எந்தவொரு ஏற்பாடும் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் வெளியிடங்களில் இருந்து அம்பாறை மாவட்டத்துக்குச் சுற்றுலா வரும் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே வீதி அபிவிருத்தி அதிகார சபை உடனடியாக இவ்விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# வன்னியின் அபிவிருத்தி தொடர்பில் ரவிகரன் எம்.பியால் மகஜர் கையளிப்பு

(விஜரத்தினம் சரவணன்)

வன்னியில் காணப்படும் சில அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் மகஜர்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களின் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க மற்றும், தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களான மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், செல்லத்தம்பி திலகநாதன் ஆகியோரிடமே இவ்வாறு மகஜர்கள் கையளிக்கப்பட்டன.



# முஸ்லிம் பண்பாட்டு அலுவல்கள் பணிப்பாளர் தர்மசக்தி அமைப்பினருடன் சினேகபூர்வ சந்திப்பு

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )

தர்மசக்தி அமைப்பின் தலைவர் சங்கைக்குரிய கலாநிதி மாதம்பஹம அஸ்ஸஜி தேரர் – முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்கு சினேகபூர்வ விஜயமென்றை மேற்கொண்டு திணைக்கள பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸுடன் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் இனங்களுக்கு இடையிலான சகவாழ்வு மற்றும் புரிந்துணர்வை மேம்படுத்துவது தொடர்பான பொறிமுறைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

தர்ம சக்தி அமைப்பும் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும் இணைந்து எதிர்காலத்தில் நாடளாவிய ரீதியில் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வேலைத் திட்டங்களை மேற்கொள்வது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், தர்ம சக்தி அமைப்பின் நிறைவேற்று செயலாளர் மரியாதைக்குரிய பாதிரியார் அநுர பெரேரா, உதவிச் செயலாளர் சிவஸ்ரீ சிவ தர்சக சர்மா குருக்கள், பொருளாளர் அஷ்ஷெய்ஹ் ஏ.என்.எம். பிர்தௌஸ், நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ஜனாப். ரிஸான் ஹுஸைன் மற்றும் அமைப்பின் உறுப்பினர்களான ஜனாப் சுல்கிப் மௌலானா, ஜனாப் அஸாம் லத்தீப் ஆகியோருடன் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹமட், வக்ப் நியாய சபை செயலாளர் (பதில்) எம்.என்.எம். ரோஸன், திணைக்கள சகவாழ்வு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் அஷ்ஷெய்ஹ் ஏ.எம். றிஸ்மி ஆகியோர் கலந்து கொண்டனர்.



# கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுங்கள்

## ஹிஸ்புல்லா எம்.பி. கோரிக்கை

(எஸ். சினீஸ்கான்)

நாட்டினுடைய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு நாட்டை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கும் எங்களால் முடிந்த ஒத்துழைப்புக்களை வழங்க தயாராக இருக்கிறோம்.

அதேநேரம் மக்களுடைய பிரச்சினைகளையும், அபிவிருத்தியின் தேவைகளையும் பற்றி இந்த உயர்ந்த சபையில் பேசவேண்டிய தேவை எமக்கிருக்கிறது.

அரசு நாட்டினுடைய பொருளாதாரத்தில் மிக முக்கிய வருமானமாக இருக்கின்ற சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு எந்தவொரு பணியையும் இதுவரை முன்னெடுக்கவில்லை.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை முன்னேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

அவர் மேலும் உரையாற்றுகையில்,


சுற்றுலாத்துறையின் பிரதான இடமாக கிழக்கு மாகாணம் திகழ்கிறது. குறிப்பாக பொத்துவில் பிரதேசத்திலுள்ள அருகம்பை பிரதேசமானது ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகைதரும் இடமாக இருக்கிறது. ஆனால் அது இதுவரையில் சுற்றுலா வலயமாக வர்த்தமானி செய்யப்படவில்லை.

அங்கிருக்கின்ற கடற்கரையை சுத்தம் செய்வதற்கான இயந்திரத்தை கூட சுற்றுலா அமைச்சு அல்லது சுற்றுலா பணிமனை அங்கிருக்கின்ற உள்ளூராட்சி மன்றத்துக்கு வழங்கவில்லை. அது மட்டுமல்லாது சில காரணங்களால் மூன்று மாடிக்கு மேல் ஹோட்டல்கள் அமைப்பதற்கு அனுமதி இல்லாமலும் உள்ளது. இது போன்ற சிறிய விடயங்களால் அருகம்பை பிரதேசத்தில் சுற்றுலாத்துறை முன்னேற்றுவதற்கு நிறைய சவால்களை எதிர்நோக்கவேண்டிய நிலை காணப்படுகிறது. சம்மந்தப்பட்ட அமைச்சர் இவ் விடயத்தை உடனடியாக கருத்தில் கொள்ள வேண்டும்.



அதேபோல், மட்டக்களப்பு விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் பல அபிவிருத்தித் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இருந்த போதிலும் பயணிகள் முனையம் வசதிகள் போதாமையால் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்ய முடியாத நிலையும் காணப்படுகிறது. இதனை சரி செய்ய முடியுமாக இருந்தால் சுற்றுலாப் பயணிகளை திருகோணமலை, பாசிக்குடா, பொலநறுவை, அருகம்மை பிரதேசங்களுக்கு நேரடியாக அழைத்து வரலாம். சுற்றுலாத்துறையைக் கிழக்கு மாகாணத்தில் முன்னேற்றுவதோடு நாட்டினுடைய வருமானத்தையும் அதிகரிக்கலாம்.– என்றார்.

# மலையக இலக்கியத்தை உலகுக்கு அறிமுகப்படுத்திய அந்தனி ஜீவா!



■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

***(படைப்பின் இலட்சியம் சமுதாயத்தின் தேவையாக இருக்க வேண்டும். அதில் மண்ணின் மணம் இருக்க வேண்டும். கலைஞன் மானுடம் படைக்கும் ஆத்மாவின் ராகமாகத் திகழ வேண்டும் என்ற தமது கூற்றின் வழி நின்று இலக்கியம் படைத்த அந்தனி ஜீவாவின் புகழ் ஈழத்து மலையக இலக்கிய வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும். அந்தனி ஜீவாவை தமிழ் கூறும் நல்லுலகம் இழந்துள்ளது.)***

எழுத்தாளர், நாடக ஆசிரியர், நாடகக் கலைஞர், நாடக இயக்குநர், தொழிற்சங்க செயற்பாட்டாளர், இதழாளர், பதிப்பாளர், சிறுகதை ஆசிரியர், முற்போக்குச் சிந்தனையாளர் எனப் பன்முக ஆளுமைப் படைத்த அந்தனி ஜீவா 2010 இல் எதிர்வு கூறலால் மலையகத்தில் விழிப்பணர்ச்சி உருவாகியது.

மலையக மக்களின் வாசிப்புத்திறன் மிகக் குறைந்து விட்டது. வாசிப்பதே இல்லை என்ற அளவுக்கு நிலைமை மாறிவிட்டது. ஒப்பிட்டளவில் இலக்கியம் மொழி ஆகிய துறைகளில் ஏனைய சமூகங்களைவிட மிகப் பின் தங்கிவிட்டதாக மலையக எழுத்தாளர் அந்தனி ஜீவா 2010 ஓகஸ்டில் அன்றைய நிலைமையை எடுத்துக் கூறினார்.

பாடசாலை மட்டத்தில் மொழி வளர்க்கப்படுவது குறைந்து விட்டது. வாசிப்பும் இல்லை தமிழ் மொழி வளர்க்கப்படுவதுமில்லை என்றால் இலக்கியவாதிகளால் என்ன செய்யமுடியும்? நாமே பாதை வெட்டி பயணிக்கும் காலத்துக்குள் தள்ளப்பட்டு விட்டோம்.

ஏனைய சமூகங்கள் ஏற்கனவே வெட்டப்பட்ட பாதையில் நீண்ட தூரம் சென்று கொண்டிருக்கின்றனர். அதுவும் கரடு முரடு இல்லாத பாதை. எமது நிலை கவலைக்கிடமாக உள்ளது. ஓரிரு நல்லெண்ணம் படைத்த பெரும் தகைகளால் ஏதோ பயணம் தொடர்கிறது என கொழுந்து சஞ்சிகை கண்டி இந்து காலாசார மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்ட போது உரை நிகழ்த்திய சஞ்சிகையின் ஆசிரியர் அந்தனி ஜீவா விசனப்பட்டார்.

மலையகத்தில் நீண்ட காலமாக 'கொழுந்து' சஞ்சிகையை 31 ஆவது இதழ் வரை 20 இற்கும் மேற்பட்ட வருடங்கள் தனிமனிதனாக இருந்து வெளியிட்டு வருவது என்பது கற்பனை செய்ய முடியாத ஒன்றாகும்.

மலையக எழுத்துக்களைப் பதிப்பிக்கும் முயற்சிகளிலும் பங்களித்து வரும் அந்தனி ஜீவா 1944 மே 26 இல் பிறந்தார். கலையையும், இலக்கியத்தையும் வெறும் பொழுதுபோக்குக்காக அல்லாது, சமூக விழிப்புணர்வுக்கான ஊடகமாகக் கருதித் தமது பணியை மேற்கொண்டு வருபவர்.

கொழும்பைப் பிறப்பிடமாகவும் மலையகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட எழுத்தாளரும் கவிஞருமாக அந்தனி ஜீவா விளங்குகினார்.

மலையக இலக்கியங்களையும், இலக்கியக் கர்த்தாக்களையும் இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தியவர் என்ற பெருமையும் அந்தனி ஜீவாக்கு உண்டு.9

மலையகத்தில் தமிழ் வளர்த்தோரும், கலை வளர்த்தோரும், மலையக மக்களிடம் உரத்த சிந்தனைகளை விதைத்தோரும், மலையக மக்களின் விடுதலைக்கு உழைத்தோரும் எனப் பன்னிருவர் பற்றிய தகவல்கள் அடங்கிய 'மலையக மாணிக்கங்கள்' என்னும் நூலை 1998 ஆம் ஆண்டு கொழும்பு துரைவி வெளியீடாக கொண்டு வந்தார்.

அந்த நூலில், மலையக மக்களின் முன்னேற்றத்துக்காக உழைத்த முன்னோடிகளான கோ. நடேசய்யர், மீனாட்சி அம்மையார், பெரி. சுந்தரம், இராமானுஜம், ஜெ.எஸ். பெரோ, ஜார்ஜ் ஆர். மேத்தா, மலையக காந்தி ராஜ லிங்கம், வி.கே. வெள்ளையன், சி.வி. வேலுப்பிள்ளை, ஏ. அஸீஸ் சோமசுந்தரம், அசோகா பி.டி. ராஜன் ஆகியோர் பற்றிய சிறப்பான பதிவுகள் இடம் பெற்றுள்ளன.

### மலையக இலக்கியச் சுடர்

கொழும்பு நாவல திறந்த பல்கலைக் கழகத்தில் பத்திரிகைத் துறையில் டிப்புளோமா பட்டம் பெற்ற அந்தனி ஜீவா தினபதி, செய்தி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளில் பணியாற்றியுள்ளார்.

கொழுந்து, குன்றின் குரல் சஞ்சிகைகளின் ஆசிரியராகவும், லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் வெளியிட்ட ஜனசக்தி என்ற மாத இதழின் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

அன்றைய இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி 31.10.1984 அன்று சுட்டுகொல்லப்பட்டதன் எதிரொலியாக தினகரன் இதழின் வாரமஞ்சரியில் 'அன்னை இந்திரா' தொடராக எழுதிய கட்டுரைகளின் தொகுப்பானது நூலாகவும் வெளிவந்தது.

அத்துடன் ஈழத்தில் தமிழ் நாடகம் (1981), அன்னை இந்திரா (1985), காந்தி நடேசையர் (1990), மலையகமும் இலக்கியமும் (1995), முகமும் முகவரியும் (1997), மலையக மாணிக்கங்கள் (1998), அக்கினிப் பூக்கள் (1999), சி. வி. சில நினைவுகள் (2002) குறிஞ்சிக் குயில்கள் (2002), மலையகத் தமிழ் இலக்கியத்துக்கு முஸ்லீம் எழுத்தாளர்களின் பங்களிப்பு (2002), மலையகம் வளர்த்த கவிதை (2002), கண்டி மாவட்டத் தமிழர்களின் வரலாற்றுப் பதிவுகள் (2002), திருந்திய அசோகன் (2003), நெஞ்சில் பதிந்த ஐரோப்பிய பயணம் (2003), மலையகத் தொழிற்சங்க வரலாறு (2005), சிறகு விரிந்த காலம் (2007), ஒரு வானம் பாடியின் கதை (2014) போன்ற நூல்களை அந்தனி ஜீவா எழுதியுள்ளார்.

### கொழுந்து சஞ்சிகையின் ஆசிரியர்

மலையக எழுத்துக்களைப் பதிப்பிக்கும் முயற்சிகளிலும் பங்களித்து வரும் அந்தனி ஜீவா, தான் செயலாளராகப் பணியாற்றும் மலையக வெளியீட்டகம் மூலம் பல நூல்களை வெளியிட்டுள்ளார். அந்தனி ஜீவா கொழுந்து சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றி உள்ளார்.

மலையக பெண்களின் எழுத்துக்களை தொகுத்து குறிஞ்சி மலர்கள் (சிறுகதைகள், 2000), குறிஞ்சிக் குயில்கள் (கவிதைகள், 2002), அம்மா (சிறுகதைகள், 2004) போன்ற தொகுப்புக்களையும் வெளியிட்டுள்ளார். அத்துடன் இவர் அரச சாகித்திய விருது, அரச இலக்கிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

### மலையகமும் இலக்கியமும் நூல்

'மலையகமும் இலக்கியமும்' என்னும் நூலில் மலையக இலக்கியத்தின் வரலாற்றுப் பின்னணி, வாய்மொழி இலக்கியம், மலையகமும் கவிதையும், மலையகமும் சிறுகதையும், மலையகமும் நாவல்களும், மலையகமும் கலைகளும் முதலிய தலைப்புகளில் மலையக இலக்கிய வரலாற்றை விரிவாக அந்தனி ஜீவா பதிவு செய்துள்ளார்.

மலையகக் கவிதைகளின் வளர்ச்சி பற்றி கடந்த

தொடர்ச்சி ▼

# மலையக...

**தொடர்ச்சி▲**

கால் நூற்றாண்டுக்கு மேலாக தாம் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து 'மலையகம் வளர்த்த கவிதை' என்னும் நூலை கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் வாயிலாக 2002 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

மலையக இலக்கிய வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்து வரும் 12 பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தொகுத்து 'குறிஞ்சி மலர்கள்' என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டவர் அந்தனி ஜீவாவே.

மலையகத்தின் தேர்ந்த 21 பெண் கவிஞர்களின் கவிதைகளை தொகுத்து 'குறிஞ்சிக் குயில்கள்' என்னும் நூலை 2002 ஆம் ஆண்டு உலக மகளிர் தினத்தை முன்னிட்டு கொண்டு வந்தார்.

'அம்மா' என்ற தலைப்பில் 25 இலங்கை பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளை தொகுத்து, சென்னை கலைஞன் பதிப்பகத்தின் மூலம் கொண்டு வந்தார். 'புதிய வார்ப்புகள்' என்ற வரிசையில் இளைய தலைமுறை எழுத்தாளர்களையும், 'பெண் பிரம்மாக்கள்' என்ற தலைப்பில் பெண் படைப்பாளர்களையும் கொழுந்து இதழ்களில் அறிமுகப்படுத்தியவர் அந்தனி ஜீவா.

மலையக இலக்கியத்திற்கு புத்துயிர் அளித்த அந்தனி ஜீவா "கலை இலக்கியச் செயற்பாடுகள் எனக்களிப்பது ஊதியமல்ல, உயிர்" என்ற உயர்ந்த இலட்சியத்தை மனதில் ஏற்றுச் செயற்பட்ட பெருமைக்குரியவர்.

**ஈழத்து நாடக மேடையில் புதிய வீச்சு**

அந்தனி ஜீவா ஈழத்து நாடக மேடையில் புதிய வீச்சுக்களையும், புதிய தரிசனங்களையும் கொண்ட நாடகங்களை மேடையேற்றியுள்ளார்.

மலையகத்தில் 1980 களில் வீதி நாடகங்களை முதன் முதலில் ஆரம்பித்தவர் என்ற பெருமை அந்தனி ஜீவா அவர்களையே சேரும்.

இவர் 1980 ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக்குச் சென்று வீதி நாடக முன்னோடியான பாதல் சர்கார் சென்னையில் நடத்திய பயிற்சிப் பட்டறையில் பயிற்சி பெற்றார்.

மக்களுடன் நேரடியானதும், நெருக்கமானதுமான தொடர்பை ஏற்படுத்தும் சிறந்த கலை ஊடகமான தெரு நாடகங்கள் அந்தனி ஜீவாவின் முயற்சியால் மலையகத்தில் புத்துயிர் பெற்றது.

இவரின் 'வீணை அழுகிறது' என்ற சமூக நாடகம் பெரிய இடத்து அரசியல் வாதிகளின் தோலை உரித்துக் காட்ட முனைந்ததால், அரசால் தடை செய்யப்பட்டதும் தெரிந்ததே. 'அலைகள்' நாடகம் இலங்கை கலாச்சாரப் பேரவை 1978 ஆம் ஆண்டு நடத்திய தேசிய நாடக விழாவில் இரு விருதுகளைப் பெற்றது.

அத்துடன் கொழும்பிலும், மலையகத்திலும் பல வீதி நாடகங்களை நடத்தியுள்ளார். இலங்கை இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் 1994 ஆம் ஆண்டு நடத்திய தமிழ் நாடக விழாவில் இவரது 'ஆராரோ ஆரிவரோ' என்ற நாடகம் விருது பெற்றது. மகாகவி பாரதி, ஆராரோ ஆரிவரோ, கவிதா, பறவைகள், வெளிச்சம், சாத்தான் வேதம் ஓதுகின்றது, ஒன்று எங்கள் ஜாதியே, அக்கினிப் பூக்கள், தீர்ப்பு, வீணை அழுகின்றது, முள்ளிள் ரோஜா, அலைகள், பறக்காத கழுகுகள் முதலிய நாடகங்கள் உட்பட 14 நாடகங்களை மேடையேற்றியுள்ளார்.

"படைப்பின் இலட்சியம் சமுதாயத்தின் தேவையாக இருக்க வேண்டும். அதில் மண்ணின் மணம் இருக்க வேண்டும். கலைஞன் மானுடம் படைக்கும் ஆத்மாவின் ராக மாதக் திகழ வேண்டும்" என்ற தமது கூற்றின் வழி இன்றும் இலக்கியம் படைத்த அந்தனி ஜீவாவின் புகழ் ஈழத்து மலையக இலக்கிய வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.





# டிக்கோயா பாடசாலை மாணவர் விவகாரம் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுப்பு!

**(க.கிஷாந்தன்)**

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட டிக்கோயா ஸ்ரீ வாணி ஆரம்ப பாடசாலையில் கல்வி பயிலும் சுமார் 50 மாணவர்களுக்கு ஏற்பட்ட திடீர் சுகவீனம் தொடர்பாக அம்பகமுவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பொது சுகாதார பரிசோதகர்கள் நேற்று (11) குறித்த பாடசாலைக்குச் சென்று பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பாடசாலையில் 1 தொடக்கம் 5 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களில் 50 பேரே இவ்வாறு திடீரென சுகவீனமடைந்துள்ளனர்.

இந்த மாணவர்களுக்கு நேற்று முன்தினம் (10) மாலை முதல் தலைச்சுற்று, வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற அறிகுறிகள் தென்பட்டதை அடுத்து, பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

50 மாணவர்களில் 25 மாணவர்கள் டிக்கோயா ஆதார வைத்தியசாலையிலும், ஏனைய 25 மாணவர்கள் ஹட்டன் நகரத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்றனர். ஏனைய மாணவர்கள் வீடு திரும்பியுள்ள நிலையில் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் மூன்று மாணவர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாணவர்களின் நிலைமை பாரதூரமாக இல்லை என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (10) பாடசாலையில் மாணவர்களுக்கு காலை உணவாக சோறு, போஞ்சி, பருப்பு மற்றும் கீரை ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. எனினும், அந்த உணவை சாப்பிடாத மாணவர்களும் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனால், பாடசாலையில் உள்ள குடி தண்ணீரால் எதுவும் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகித்த அம்பகமுவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பொது சுகாதார பரிசோதகர்கள் நேற்று (11) பாடசாலைக்கு விஜயம் செய்து குடி தண்ணீர் மாதிரிகளை சேகரித்துள்ளனர்.

தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# அலைமகள் கடற்றொழில் சங்கத்தினரை சந்தித்தார் யாழ். இந்திய துணை தூதுவர்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினரை யாழ். இந்திய துணை தூதுவர் சாய் முரளி இன்று (12) சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது கடற்றொழிலாளர்கள் மீன் பிடியில் ஈடுபடும் கடற்கரைக்கு தூதுவர் சென்றார்.

தொடர்ந்து மீனவர்கள் தமது வாழ்வாதாரப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினார். அங்கு இழுவை மடிகளால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நிலை குறித்தும் மீனவர்களின் தேவைகள் குறித்தும் கலந்துரையாடினார். இதேவேளை கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகளால் துணைதூதுவருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

யாழ். இந்திய துணைதூதரக அதிகாரிகளான செல்வி ரம்யா மற்றும் நாகராஜன், அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.








# இந்திய மக்களின் பங்களிப்புடன் மாணவருக்கு கற்றல் உபகரணம்

(எஸ்.நிதர்ஷன்)

பொங்கல் திருநாளை முன்னிட்டு இந்திய மக்களின் பங்களிப்புடன் சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக் கல்வி நிலையத்தின் மாணவர்களுக்கு யாழ் இந்திய துணைத் தூதரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. தொடர்ச்சியாக 73 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி , யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி , சங்கானை பிரதேச செயலர் கவிதா உதயகுமார், யாழ். இந்திய துணைத் தூதரக அதிகாரிகளான நாகராஜன், செல்வி ரம்யா, கலைமகள் இலவசக்கல்வி நிலைய உப தலைவர் அருள் சிவானந்தன், அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினர், கலைமகள் சனசமூக நிலையத்தினர், சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.







# யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு ரூ. 5 லட்சம் பெறுமதியில் உதவிகள்

சந்நிதியான் ஆச்சிரமம் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு 5 லட்சம் ரூபா பெறுமதியில் தைப்பொங்கலுக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்திடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக 320 விழிப்புலனற்ற குடும்பங்களுக்கு 5 லட்சம் ரூபா பெறுமதியில் இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் யோ.சுதாகரன் தலைமையில் சங்கத்தின் யாழ்ப்பாண தலைமை அலுவலகத்தில் நேற்று (11) இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஆச்சிரம முதல்வர் அமுதகலாசுரபி கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று உதவிகளை வழங்கி வைத்தார்.




# மீனவர்கள் கைது விவகாரத்தில் இலங்கையை கண்டிக்க வேண்டும்

## மத்திய அரசிடம் ஜி.கே. வாசன் வலியுறுத்தல்


"தமிழ்நாட்டைச் சேர்ந்த 8 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்தது மிகவும் கண்டிக்கத்தக்கது. மத்திய மாநில அரசுகள் தமிழக மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்கு முழுப்பாதுகாப்பு கொடுக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்."

– இவ்வாறு தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 8 மீனவர்களை கைது செய்த இலங்கை கடற்படையினர், அவர்கள் பயன்படுத்திய 2 விசை படகுகளையும் பறிமுதல் செய்தனர். எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கைது செய்யப்பட்ட 8 மீனவர்களும் இராமேஸ்வரத்தைச் சேர்ந்தவர்களாவர். இச்சம்பவம் தமிழக மீனவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை கைது செய்வதும், படகுகளை பறிமுதல் செய்வதும், அச்சுறுத்துவதும், மீன்பிடிச் சாதனங்களை சேதப்படுத்துவதும் வாடிக் கையாகிவிட்டது. இதனால்



தமிழக மீனவர்களின் மீன்பிடித் தொழில் மிகப்பெரிய அளவில் பாதிக கப்பட்டுள்ளது. இப்புதிய ஆண்டின் தொடக்கத்தில் கடந்த 9 ஆம் திகதியன்று தமிழக மீனவர்கள் 10 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்து, ஒரு விசைப்படகையும் பறிமுதல் செய்தனர். இதனைத் தொடர்ந்து தற்போது மேலும் 8 தமிழர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்புதிய ஆண்டில் பொங்கல் பண்டிகையை ஒட்டி தமிழக மீனவர்கள் மீன்பிடித்து வாழ்வாதாரத்தை புதிய பொலிவுடன் தொடர நினைத்து மீன் பிடிக்கச் சென்றால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இது தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை கேள்விக் குறியாக்குகிறது. இனிமேலும் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படக்கூடாது, படகுகள் பறிமுதல் செய்யப்படக்கூடாது என்பதற்காக மத்திய மாநில அரசுகள் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதாவது தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவத்திற்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும் என மீனவர்கள் நீண்ட காலமாக தொடர்ந்து போராடி வருகின்றனர். ஆனால், அதற்கான தீர்வு இதுவரை கிடைத்தபாடில்லை. கைது நடவடிக்கை தொடர்ந்து நடந்து வருவது மீனவர்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மத்திய அரசு உடனடியாக இலங்கை அரசுடன் பேசி கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், படகுகளையும் மீட்டு மீனவர்கள் பொங்கல் பண்டிகையை கொண்டாட உதவிட வேண்டும்.

மத்திய அரசு இலங்கை அரசிடம் கண்டிப்போடு பேசி இனிமேல் இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதை தெரிவித்து தமிழக மீனவர்களின் வாழ் வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் வலியுறுத்துகிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# தலைசிறந்த நிறுவனங்களில் தமிழர்களின் திறமை, உழைப்பு தவிர்க்க முடியாதவை

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவிப்பு

கூகுள், மைக்ரோசாப்ட், ஆப்பிள் போன்ற தலைசிறந்த நிறுவனங்களிலும், தமிழர்களின் திறமை, உழைப்பு தவிர்க்க முடியாதது என சென்னையில் நடந்த அயலகத் தமிழர் தின விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்.

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் 'எத்திசையும் தமிழணங்கே' என்ற கருப்பொருளில் அயலகத் தமிழர் தின விழா சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நேற்று தொடங்கியது. 2 நாள்கள் நடைபெறும் இவ்விழாவை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமை வகித்து தொடங்கி வைத்தார்.

அத்துடன் அமைக்கப்பட்டிருந்த அயலக தமிழ்ச் சங்கங்கள், சுற்றுலா, மருத்துவம், தொழில் அரங்குகள் அடங்கிய கண்காட்சியையும் திறந்து வைத்து பார்வையிட்டார்.

சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் விழாவுக்கு முன்னிலை வகித்தார். இதில் அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர், மலே



ஷியா, தென்னாபிரிக்கா, இலங்கை என 50 இற்கும் அதிகமான நாடுகளில் இருந்து அரசு பொறுப்புகளில் அதிகாரிகளாக பணியாற்றும் தமிழர்கள் பங்கேற்றனர். விழாவில் தமிழ்ச்சங்கங்களுக்கு விருதுகள், கனியன் பூங்குன்றனார் விருது, தமிழ்மாமனி பட்டம், பண்பாட்டு தூதுவர் விருது போன்ற விருதுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வழங்குவுள்ளார்.

விழாவை தொடங்கி வைத்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றுகையில்,

"உலகெங்கும் வாழும் தமிழர்களின் நலனை கருத்தில் கொண்டு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்த்துறையை கடந்த 2021 ஆம் ஆண்டு தி.மு.க. அரசு உருவாக்கியது. தற்போது இதில் 26 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக இருந்து வருகின்றனர். உலகளவில் தமிழர்களின் உழைப்பும், ஆற்றலும் இன்றைக்கு தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது. கூகுள், மைரோசாப்ட், ஆப்பிள் என உலகின் அனைத்து தலைசிறந்த நிறுவனங்களிலும் தமிழர்களின் திறமைக்கு தனி மதிப்பு இருக்கிறது.

அதேபோல் வெளிநாடுகளில் வாழும் தமிழக மக்களுக்கு பிரச்சினை என்றால் அயலகத் தமிழர் நலத்துறை உடனே களத்தில் இறங்கி அவர்களை மீட்டெடுக்கிறது. சமீபத்தில் நடந்த 'ரஷ்யா – உக்ரைன்' போர், 'பாலஸ்தீனம் – இஸ்ரேல்' போர் போன்றவற்றில் கூட, அங்கு தங்கி படித்து வந்த நம் மாணவர்களை பத்திரமாக மீட்டு தமிழகத்துக்கு அழைத்து வந்திருக்கிறது. அந்த வகையில் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 2,500 பேரை அயலகத் தமிழர் நலத்துறை மீட்டு வந்திருக்கிறது. இதுபோன்ற சந்திப்புகள் நமக்கு இடையேயான தமிழ் உணர்வையும், பாசத்தையும் அதிகரிக்கும் என நம்புகிறேன்."– என்றார்.





# லொஸ் ஏஞ்சல்ஸ் காட்டுத்தீயில் சொகுசு ஹோட்டல் எரிந்து நாசம்

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரின் மத்தியில் திரைப்பட நகரமான ஹாலிவுட் பகுதி உள்ளது. அங்கு முன்னணி திரைப்பட நிறுவனங்கள், அவற்றின் திரைப்பட நகரங்கள் அமைந்துள்ளன. இதன் காரணமாக ஹாலிவுட் திரையுலகின் தலைநகராக லொஸ் ஏஞ்சல்ஸ் விளங்குகிறது.

கடந்த 7 ஆம் திகதி லொஸ் ஏஞ்சல்ஸின் பாலிசேட்ஸ் பகுதியில் காட்டுத் தீ ஏற்பட்டது.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 5 நாள்களாக காட்டுத் தீ பற்றி எரிகிறது. இதுவரை 10 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். வனப்பகுதியில் ஏற்பட்ட இந்தத் தீ கட்டுக்கடங்காமல் பரவி வருகிறது.

இந்நிலையில் உலகின் மிகவும் அதிநவீன சொகுசு விடுதியான பசுபிக் பாலிசாடஸ் என்ற பெயரிலான சொகுசு விடுதி, இந்த காட்டுத் தீயில் சிக்கி எரிந்து நாசமாகியுள்ளது.

இதன் மதிப்பு 10,375 கோடி இந்திய ரூபா ஆகும். 18 படுக்கை அறைகள் கொண்ட இந்த சொகுசு விடுதியானது உலகிலேயே உள்ள ஹோட்டல்களில் அதிக கட்டணத்தைக் கொண்டதாக அமைந்துள்ளது.

லூமினார் டெக்னாலஜீஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி ஆஸ்டின் ரஸ்ஸல் என்பவருக்குச் சொந்தமான ஹோட்டல் இது என்று டெய்லி மெயில் இணையதளம் தெரிவித்துள்ளது.

இந்த சொகுசு விடுதியின் கட்டணம் மாதத்துக்கு சுமார் 3.74 கோடி இந்திய ரூபா ஆகும். இங்கு உலகில் உள்ள அத்தனை வசதிகளும் அமைந்துள்ளன. அதிநவீன சமையலறை, 20 பேர் அமரக்கூடிய திரையரங்கம், இரவில் வானத்தை ரசிக்க திறந்து மூடும் வகையிலான கூரை அமைப்பு, ஸ்பா, ஆர்ட் காலரி, நடனமாடுவதற்கான பால்ரூம் உள்ளிட்டவை அடங்கும்.

# தண்ணீர் பற்றாக்குறை, மின்சாரம் துண்டிப்பால் லொஸ் ஏஞ்சல்ஸ் தீயை அணைப்பதில் சிக்கல்

தண்ணீர் பற்றாக்குறை, மின்சாரம் துண்டிப்பு ஆகிய பிரச்னைகளும், லொஸ் ஏஞ்சல்ஸ் காட்டுத் தீயை கட்டுப்படுத்த முடியாமல்போனதற்கு காரணம் என தீயைணைப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் தெற்கு பகுதியில் கடந்த 8 மாதங்களாக வறட்சி நிலவியது. இந்நிலையில் இங்குள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகரின் பாலிசேட்ஸ் பகுதியில் கடந்த 7 ஆம் திகதி ஏற்பட்ட காட்டுத் தீ ஏற்பட்டது. அப்போது மணிக்கு 100 மைல் வேகத்தில் சூறாவளிக் காற்றும் வீசியது. இதனால் காட்டுத் தீ 4 நாள்களில் மளமளவென பரவி 40,000 ஏக்கர் அளவுக்கு பரவியது. தண்ணீர் மற்றும் இரசாயனங்களை எடுத்துச் சென்ற தீயணைப்பு விமானங்களும், சூறாவளி காற்றின் காரணமாக காட்டுத் தீ பரவிய பகுதிக்குள் செல்ல முடியவில்லை.

தீயணைப்புத் துறையின் 7,500 வீரர்கள் காட்டுத் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். இவர்கள் உள்ளூர்களில் அமைக்கப்பட்ட தண்ணீர் குழாய்களில் இருந்து அளவுக்கு அதிகமான தண்ணீரை, நீண்ட நேரம் பயன்படுத்தி காட்டுத் தீயை அணைக்க முயன்றனர். இவர்களால் ஓரளவுக்குத் தான் காட்டுத் தீயை அணைக்க முடிந்தது. அதற்குள் தண்ணீர் குழாய்களில் அழுத்தம் குறைந்ததால், தீயை அணைப்பதற்கு தேவையான தண்ணீர் தீயணைப்பு வீரர்களுக்கு கிடைக்கவில்லை.



லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம் கடல் மட்டத்தில் இருந்து 1,500 அடி உயரத்தில் உள்ளது. இங்குள்ள உயரமான பகுதிகளில் தண்ணீர் தொட்டிகள் மூலமாகவே தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது.

அல்டாடெனா மற்றும் பசாடெனா மற்றும் ஈட்டன் போன்ற பகுதிகளில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் தண்ணீர் இருப்பு குறைந்ததால், தீயணைப்பு வீரர்களுக்கு உள்ளூர் தண்ணீர் குழாய்கள் மற்றும் தீயணைப்புக்கு பயன்படுத்தப்படும் குழாய்களில் தண்ணீர் அழுத்தம் குறைந்தது. மேலும் காட்டுத் தீ ஏற்பட்டவுடன், மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. தீயணைப்பு பணியில் ஈடுபடும் வீரர்கள் மின்சார கம்பிகளில் சிக்கி விடுவர் என்பதால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

இதன் காரணமாக தண்ணீர் தொட்டிகள் இருந்த இடத்தில் மின் மோட்டார்களை இயக்க மின்சாரம் இல்லை. இதனால் இக்கட்டான சூழ்நிலைக்கு தீயணைப்பு வீரர்கள் தள்ளப்பட்டனர். இதனால் அவர்கள் நீச்சல் குளங்கள் மற்றும் கடல் நீரை பயன்படுத்தி தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். டேங்கர் லொரிகள் மூலம் அனுப்பப்பட்ட தண்ணீரை பயன்படுத்தி காட்டுத் தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டனர். அந்த தண்ணீர் காட்டுத் தீயை அணைக்கும் அளவுக்கு போதுமானதாக இல்லை. லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நிலவிய தண்ணீர் தட்டுப்பாடு பிரச்சினையும் காட்டுத் தீயை கட்டுப்படுத்த முடியாமல் போனதற்கு காரணம் என கூறப்படுகிறது. இதனால் இப்பகுதிகளில் 5,000 இற்கும் மேற்பட்ட கட்டடங்கள் தீயில் எரிந்து நாசாமாயின.

இங்கு தண்ணீர் விநியோகம் பாதித்தது குறித்து விசாரணை நடத்த கலிபோர்னியா ஆளுநர் கவின் நியூசம் உத்தரவிட்டுள்ளார். தீயணைப்புத் துறைக்கு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டதும், இது போன்ற சூழ்நிலைக்கு காரணம் என பொது மக்கள் கூறுவதால், லொஸ் ஏஞ்சல்ஸ் மேயர் கரன் பாஸ் உள்ளிட்ட உள்ளூர் தலைவர்கள் கடும் விமர்சனத்துக்கு ஆளாகியுள்ளனர்.

காட்டுத் தீ போன்ற சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்கு தண்ணீர் சேமிப்பு திறன், தண்ணீர் விநியோக குழாய்களை மேம்படுத்துவது, தண்ணீர் மோட்டார்களுக்கு தடையற்ற மின் இணைப்பு உட்பட பல யுக்திகளை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஏற்பட்டது போன்ற பிரம்மாண்ட காட்டுத் தீ சம்பவத்தை, உலகில் உள்ள எந்த சிறந்த தண்ணீர் விநியோக அமைப்பாலும், கட்டுப்படுத்த முடியாது எனவும் ஒரு சிலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

பக்கங்கள் 03

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 12.01.2025

## லிபரல் கட்சியின் தலைமை வேண்டாம்

**அனிதா ஆனந்த் அறிவிப்பு**

லிபரல் கட்சியின் தலைமைப் பொறுப்பை நாடப் போவதில்லை என்று போக்குவரத்து அமைச்சர் அனிதா ஆனந்த் தமது 02▶




# கனடாவின் புதிய பிரதமர் யார்? மார்ச் 9 இல் அறிவிப்பு வெளியாகும்

**கனடாவின் புதிய பிரதமர் யார் என்பதை ஆளும் லிபரல் கட்சி மார்ச் 9 ஆம் திகதி அறிவிக்கும் என தகவல் வெளியாகி உள்ளது.**

**இந்த விடயத்தை ஆளும் லிபரல் கட்சியின் தலைவர் சச்சித் மெஹ்ரா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

**கனடாவில் பிரதமராக இருந்த ஜஸ்டின் ட்ரூடோ கடந்த திங்களன்று தனது பதவிவிலகல் முடிவை அறிவித்தார்.**

**இதனைத் தொடர்ந்து புதிய பிரதமரை ஆளும் லிபரல் கட்சி தெரிவு செய்வதற்கான செயல்முறையில் ஈடுபட்டுள்ளது.**

புதிய பிரதமர் யார் என்பதை அறிவிக்கும் வரை ஜஸ்டின் ட்ரூடோ பிரதமராக நீடிப்பார்.

இந்நிலையில் லிபரல் கட்சியின் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வலுவான மற்றும் பாதுகாப்பான நாடு தழுவிய செயல்முறைக்குப் பின் கனடாவின் லிபரல் கட்சியானது மார்ச் 9ஆம் திகதி ஒரு புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் என தெரிவித்துள்ளார்.

தற்போது தெரிவு செய்யப்படும் பிரதமர் கனடா வரலாற்றிலேயே மிகக் குறைந்த காலம் பதவியில் இருந்த பிரதமராக அறிவிக்கப்படுவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கனடா பிரதமர் போட்டியில் இந்திய வம்சாவளி எம்.பி.

## யார் இந்த சந்திரா ஆர்யா?

கனடாவில் ஒக்டோபர் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. இந்த நிலையில் அந்நாட்டின் பிரதமராக இருக்கும் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு எதிராக எதிர்ப்புகள் கிளம்பின. இதனால், அவருக்கு ஆதரவு அளித்து வந்த என்.டி.பி. கட்சியும் தனது ஆதரவை விலக்கிக் கொண்டது.

இதையடுத்து அவருக்கு நெருக்கடி அதிகரித்தது. மேலும், அவரது சொந்த லிபரல் கட்சிக்குள்ளேயே அவர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை அதிகரிக்கத் தொடங்கியது.

இந்த நிலையில், லிபரல் கட்சியின் தலைவர் பதவியில் இருந்தும் பிரதமர் பதவியில் இருந்தும் விலகுவதாக அறிவித்த ட்ரூடோ, கட்சித் தலைவர் பதவியை இராஜினாமா செய்தார். என்றாலும், அடுத்த பிரதமர் தேர்வு செய்யப்படும்வரை தொடர்ந்து பதவியில் இருப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அடுத்த தலைவரை தேர்வு செய்யும் பணியில் கட்சித் தலைமை ஈடுபட்டுள்ளது. கட்சித் தலைவராகும் நபர், இந்த ஆண்டு இறுதியில் நடைபெறும் பொதுத் தேர்தலில், பிரதமர் வேட்பாளராக களம் காண்பார் என்பதால், அதற்கான தகுதி உள்ள நபரை தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



அந்த வகையில் இந்தப் போட்டியில் பலர் உள்ளனர். வெளியுறவுத் துறை அமைச்சர் மெலானி ஜோலி, 02▶



# ரொறன்ரோ பொது போக்குவரத்து கட்டணம் அதிகரிக்கப்படாது

கனடாவின் ரொறன்ரோ பொது போக்குவரத்து சேவை கட்டணங்கள் தொடர்பில் மகிழ்ச்சி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் போக்குவரத்து கட்டணங்கள் அதிகரிக்கப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

றொன்ரோ நகரின் முதல்வர் ஒலிவியா சௌவ் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மக்கள் எதிர்நோக்கி வரும் கொள்வனவு இயலுமை பிரச்சனைகளை கருத்தில் கொண்டு இவ்வாறு கட்டண



அதிகரிப்பினை ரத்து செய்ய தீர்மானித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டிலும் டி.டி.சி. பொதுப் போக்குவரத்து சேவை கட்டடங்கள் மாற்றம் இன்றி காணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்து சேவையை மேலும் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

வயது வந்தவர்களுக்கான கட்டணம் 3.30 டாலர்களாகவும் முதியவர்களுக்கான கட்டணம் 2.25 டொலர்களாகவும், இளையோருக்கான கட்டணம் 2.35 டொலர்களாகவும் காணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் துணை பிரதமர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட், கனடா மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் மார்க் கார்னி, தொழில்துறை அமைச்சர் பிரான்காய்ஸ் மற்றும் பிரான்சுவா – பிலிப் ஷாம்பெயின், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த போக்குவரத்துத் துறை அமைச்சரான அனிதா ஆனந்த் பெயரும் பேசப்பட்டு வருகிறது. இதே பட்டியலில், மற்றொரு இந்திய வம்சாவளி எம்.பி. சந்திரா ஆர்யாவும் போட்டியிட இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கருத்து தெரிவிக்கையில்,

“இலக்கை நோக்கி கனடா பயணிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. நாட்டில் வாரிசு அரசியலை நீக்கிவிட்டு அரசின் தலைவரை நியமிக்க வேண்டிய கடமை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பயணத்தில் நாட்டை இறையாண்மைமிக்க குடியரசாக மாற்ற நான் உறுதிபூண்டுள்ளேன்.

கனடாவின் அடுத்த பிரதமராக வேண்டும் என்ற விருப்பம் எனக்குள் உள்ளது. சிறிய மற்றும் அதிதிறமைமிக்க அமைச்சரவையின் மூலம் நாட்டை மறுகட்டமைப்பு செய்து வருங்காலத் தலைமுறையினரின் பாதுகாப்பான எதிர்காலத்தை உறுதி செய்ய விழைகிறேன்.

நெருக்கடியில் உள்ள பொருளாதாரத்தை மறுசீரமைப்பு செய்வது, நடுத்தர மக்களின் நம்பிக்கையை மீட்டெடுப்பது, அனைவருக்கும் சம வாய்ப்பை உருவாக்குவது என பல துணிச்சலான முடிவுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகியுள்ளது.

அந்த வகையில் 2040 இல் ஓய்வு பெறும் வயதை மேலும் இரண்டாண்டுகள் அதிகரிப்பது, குடிமக்கள் அடிப்படையிலான வரிவிதிப்பு முறை அறிமுகம், பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க வேண்டியது போன்ற கொள்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.” எனத் தெரிவித்துள்ளார்.

ட்ரூடோ அரசு அறிமுகப்படுத்தும் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பவராகவும் கனடாவில் வாழும் இந்துக்களுக்கு ஆதரவளிப்பவராகவும் கர்நாடகவைச் சேர்ந்த சந்திரா ஆர்யா அறியப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கர்நாடக மாநிலம் சிரா தாலுகாவில் உள்ள துவார்லு கிராமத்தைச் சேர்ந்தவர் சந்திர ஆர்யா. தார்வாட்டில் உள்ள கௌசாலி இன்ஸ்டிடியூட்டில் எம்.பி.ஏ. பட்டம் பெற்றவர். 20 ஆண்டுகளுக்கு முன்பு ஒட்டாவாவுக்குச் சென்ற அவர், முதலில் பொறியாளராகப் பணிபுரிந்தார். பின்னர், படிப்படியாக தொழிலதிபராக உயர்ந்தார். 2015இல் ஹவுஸ் ஆஃப் காமன்ஸ்க்கு தனது முதல் தேர்தலில் வெற்றி பெற்றார். அவர் 2019 இல் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2022இல் ஹவுஸ் ஆஃப் காமன்ஸில் கன்னடத்தில் பேசியபோது குறிப்பிடத்தக்க கவனத்தைப் பெற்றார்.

அப்போது தனது உரையின் வீடியோவைப் பகிர்ந்துகொண்ட அவர், “கனேடிய நாடாளுமன்றத்தில் நான் எனது தாய் மொழி (முதல் மொழி) கன்னடத்தில் பேசினேன். இந்தியாவுக்கு வெளியே உலகின் எந்த நாடாளுமன்றத்திலும் கன்னடம் பேசப்படுவது இதுவே முதல் முறை,” என்றும் கூறினார்.

நவம்பர் 2024இல், இந்து பாரம்பரிய மாதத்தை நினைவுகூரும் வகையில் கனடா நாடாளுமன்றத்திற்கு வெளியே ‘ஓம்’ சின்னத்தைத் தாங்கிய காவி முக்கோணக் கொடியை சந்திர ஆர்யா ஏற்றினார். இந்து கனேடியர்களுக்காக குரல் கொடுத்து வரும் ஆர்யா, காலிஸ்தான் பிரச்னையில் உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளார், இது அவரது சொந்த லிபரல் காக்கஸ் உறுப்பினர்கள் உட்பட மற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அடிக்கடி முரண்படுகிறது.

## லிபரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


சமூக ஊடக பக்கத்தில் அறிவித்துள்ளார்.

அத்துடன், மறுதேர்தலிலும் போட்டியில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அடுத்த தேர்தல் வரும் வரையில் தாம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடரவே விரும்புவதாக நேற்று சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். லிபரல் கட்சியில் தன்னை நாடாளுமன்ற உறுப்பினராக வரவேற்றதற்கும், முக்கிய அமைச்சரவை இலாகாக்களை தனக்கு வழங்கியதற்கும் பிரதமர் ட்ரூடோ வுக்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், பிரதமர் ட்ரூடோ தனது அடுத்த அத்தியாயத்திற்குச் செல்ல முடிவு செய்துள்ளதால், அதையே தாமும் முன்னெடுக்க இதுவே சரியான நேரம் என்று தான் தீர்மானித்துள்ளதாகவும் அவர் பதிவு செய்துள்ளார்.



இதனால், கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் பொதுக் கொள்கை பகுப்பாய்வுகள் என தனது முந்தைய தொழில்முறை வாழ்க்கைக்குத் திரும்ப இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




# ஆள்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நான்கு பேர் கைது

கனடாவில் சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் அமெரிக்காவிற்கு ஆள்களை கடத்த முயற்சித்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாகனத்தில் நுட்பமான முறையில் நபர்களை மறைத்து அமெரிக்காவிற்குள் கடத்த முயற்சிக்கப்பட்டுள்ளது.

ஒன்றாரியோவின் கொர்ன்வெல் பகுதியில் வாகனம் சோதனையிடப்பட்ட போது இந்த சட்டவிரோத ஆள்கடத்தல் முயற்சி அம்பலமாகியுள்ளது.

வாகனத்தன் பின்புறத்தில் மறைத்து அழைத்துச் செல்லப்பட்ட எட்டு பேரை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் வாகனத்தின் சாரதி மற்றும் சக பயணி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளின் அடிப்படையில் மேலும் இரண்டுபேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

58 வயதான கிறிஸ் எட்வர்ட், 54 வயதான ஜோர்ஜ் டுகர், 52 நோகொக்டுங் லீ மற்றும் 43 வயதான ஹுஹுவான் நுகாயன் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளுக்கு எதிராக தொடர்ச்சியாக இவ்வாறான சோதனைகள் முன்னெடுக்கப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர். சட்டவிரோத குடியேறிகள் தொடர்பில் அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் இடையில் முரண்பாட்டு நிலை நீடித்து வரும் நிலையில், இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஒன்றாரியோ முதல்வர் பயணித்த வாகனம் விபத்தில் சிக்கியது

ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் பயணம் செய்த வாகனம் விபத்தில் சிக்கியுள்ளது.

பிக்கரிங்கின் புறொக் வீதியின் 401 ஆம் இலக்க அதிவேக நெடுஞ்சாலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

டார்லிங்டன் அணுசக்தி நிலையத்திற்கு சென்று திரும்பும் வழியில் இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டக் போர்ட் பயணம் செய்த வாகனம் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

எவ்வாறெனினும் இந்த விபத்தில் முதல்வர் போர்ட்டுக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில் சிக்கிய மற்றுமொரு வாகனத்தின் சாரதிக்கு சிறு காயங்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமக்கு எவ்வித காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.